# அன்பிருக்கையிலே

நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் என்பார்கள். ஆனால் எனக்கோ என் நோயற்ற வாழ்வு கசந்தது. பிறந்தது முதல் பதினெட்டு வருஷங்கள் ஒரு காய்ச்சல், குளிர் அனுபவித்தறியாமல், நாலு நாள் சேர்ந்தாற்போல படுக்காமல், ஆரோக்கிய வாழ்க்கை நடத்தி வந்த நான், என் வாழ்க்கையை வெறுக்கத் தொடங்கினேன். ஒரு நாலு நாள் சுரங்கொண்டு படுக்கை போட மாட்டோமா என்று ஏங்கலானேன்!

ஊரிலே பெருமை படைத்த ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவரும், சிறந்த உடல் வசீகரம் பொருந்தியவரும் வாலிபரும் பிரம்மசாரியுமான டாக்டர் ரகுநாதனின் கைகளால் நாமும் ஒரு வேளை மருந்து வாங்கிச் சாப்பிடலாமே என்ற ஆசைதான் எனக்கு! ஊரிலுள்ள ஏனைய ஆடவரும் பெண்டிரும், முதியோரும் மருந்து சாப்பிட்டுக்கொண்டு, அவரால் தீண்டப்படும்பொழுது, அவரைக் காதலராக இரண்டு வருஷங்களாகப் போற்றிவந்த நான், நோயாளி என்னும் உரிமையுடன் அவருடன் இரண்டு வார்த்தை பேச சந்தர்ப்பம் கிடைக்காதா என்று ஏங்கினேன், அதிலே என்ன தவறு! நோயை வலுவிலே எதிர்க்கொண்டழைத்தேன், அதிலே என்ன அதிசயம்? எங்கள் வீட்டிலே பாட்டி, அப்பா, அம்மா, தம்பிமார், தங்கைமார் எல்லோரும் வெவ்வேறு சமயங்களில், வெவ்வேறு விதமாக வைத்தியம் செய்து கொண்டார்கள், டாக்டர் ரகுராமனிடம். அப்படியிருக்க, அவரை என் உள்ளக்கோயிலில் இருத்தி மானஸிகமாக பூஜை செய்து வந்த நான், பிறந்த உடலுக்கு ஒரு கேடுமின்றி, அவரோடு ஒரு வார்த்தையும் பேச முடியாமல் தவித்துக்கொண்டிருந்தேன்.

டாக்டர் ரகுராமன் வைத்தியப் படிப்பை முடித்துக்கொண்டு ஊரிலே தொழில் ஆரம்பித்து ஏறக்குறைய இரண்டரை வருடங்கள் ஆகியிருக்கும். 'பால வைத்தியர்'தான் அவர் எனினும், அவருடைய நல்ல கைராசியால், அவருக்கு தொழிலில் முன்னேற்றம், 'மவுண்ட்பேட்டன் ஸ்பீடி'ல் இருந்தது. பல குடும்பங்களின் நல்வரவிற்கும் நன் மதிப்புக்கும் அவர் பாத்திரராகிவிட்டார் விரைவிலே. எங்கள் குடும்ப வைத்தியராக, ரகுராமன் இரண்டாண்டுகளாக எங்கள் அகத்திற்கு வந்துகொண்டிருந்தார். நோயாளியைப் பரிசோதித்துவிட்டு, அவரைப் பற்றி விசாரித்துவிட்டு, தகுந்த தைரியம் கூறிவிட்டு, சிகிச்சை முறைகளைச் சொல்லிவிட்டு என்னையும், "அவர் நடந்துகொள்ளுகிற அழகே அழகு!" என்று நினைக்கச் செய்துவிட்டு, அப்பால் போவார். அப்படிப் போகும்பொழுது, என் துள்ளும் நெஞ்சம் வீட்சியடையாமல், நொந்து போகாமல் இருக்க, தொலைவிலேயிருந்து தன்னையே கவனிக்கும் என்னையும் ஓர் ஊன்றிய பார்வை பார்த்துவிட்டுப் போவார்.

ஏற்கெனவே, ஆதியில் அவரைக் கண்ட நாளிலிருந்து அவரைப்பற்றி உயர்ந்த எண்ணமும், சிறிது நாட்டமும் கொண்டிருந்த என் இளமையுள்ளம், அவருடைய மின்னன்ன பார்வையால், வலிமை இழந்து, அவரைப் புகலாக அடைந்துவிட்டது. ரகுநாதன் எங்கள் அகத்திற்கு வந்துவிட்டுப் போனதும், அவருடைய கணைவீச்சுப் பார்வையை நினைந்து நினைந்து என் மனம் நிறைகொள்ளும்.

"நாம் அவரை விரும்புவது போலவே அவரும் நம்மை விரும்புகிறாரா?" "ஆகா, அதில் சந்தேகமா?" என்று பெருமிதம் கொள்வேன். உடனே கற்பனையுலகிலே சஞ்சரிக்கத் தொடங்குவேன். மணமானதும் நாங்கள் நடத்தக்கூடிய தாம்பத்திய வாழ்க்கையைச் சிருஷ்டித்துச் சித்தரித்துச் சிந்தித்து மகிழ்வேன்.

என் சிறுவயதில் யாரோ என் தந்தையிடம் எனக்குக் கணவராக வருபவர் டாக்டராக இருப்பார் என்று சொன்னதுண்டாம். "ஆமாம்! ஜாதகத்திலிருந்து இதையெல்லாம் கண்டுபிடிக்க முடியுமாக்கும்!" என்று என் தந்தை சொல்லவும் சொன்னார், நினைக்கவும் நினைத்தார். எனக்கும், டாக்டராகி வரப்போகும் கணவரைப் பற்றி அதிகம் யோசனைகள் இருந்ததில்லை.

ஆனால் ரகுராமன் டாக்டராக உள்ளூரில் தொழில் ஆரம்பித்த பின், எங்கள் வீட்டிற்கு அவர் வரத் தொடங்கியபின், "இவர்தான் நம் கணவராக ஏற்படப்போகிறவரோ?" என்று தோன்றியது. "ஆகா, உண்மையில் அப்படி நடந்தால் என்ன இன்பம், என்ன அதிர்ஷ்டம்!" என்ற எண்ணம், முதன் முதலில் என் மனதில் காதல் விதையை விதைத்துப் புதைத்தது. நாளடைவிலே, அவருடைய தண் போன்ற மென்மை நிறைந்த வருகையினாலும், மின் போன்ற வலிமை நிறைந்த பார்வையாலும், இரவியும் மதியும் அளிக்கும் சக்திகள் பெற்று முளைத்தெழுந்து செழித்து வளரும் கொடி போல, என் உள்ளத்திலே காதற்கொடியும் வளர்ந்து வந்தது.

சலனமோ, மாறுதலோ காட்டாத அவருடைய செயலில் காணப்பட்ட ஆர்வத்தை, என் உள்ளம் ஆதாரமாக ஏற்க விழைந்தது விந்தையா? எங்கள் தாம்பத்திய வாழ்க்கையை கற்பனை செய்து வரலானேன், திளைக்கலானேன்.

இன்பமே நீடிக்கிறதா?

ஒரு நாள் யாரோ என் தாயிடம், "உங்கள் பெண்ணை என் ரகுராமனுக்குக் கொடுக்கக் கூடாது?" என்று கேட்டுக்கொண்டிருந்ததை கவனித்தேன் நான். கல்யாண வயது அடைந்துவிட்ட என் போன்ற பெண்களுக்கெல்லாம், பாம்புச் செவியல்லவா இருக்கும்? கவனித்தேன்.

ஏற்கனவே என் மனதில், "பெற்றோர் ஏன் உள்ளூர் வரனைக் கவனிக்காமல் ஏதேதோ வரன்களைக் கவனிக்கிறார்கள்? ரகுராமனுக்கு என்னைக் கொடுக்க என்ன தடையிருக்கிறதாம்?" என்ற கேள்வி ஆகாசவாணம் போல சீறி எழுந்ததுண்டு. அதனால் இப்போது "நம் பெற்றோரின் மனப்போக்கு ஏதோ தெரிந்துபோகும்!" என்று ஆவல் மிகுந்து தாயின் மறுமொழியைக் காதுகொடுத்துக் கேட்டேன்.

"கொடுக்கலாம்! ஆனால் நடக்குமா என்பதுதான் கேள்வி? அவர்களுக்கும் நமக்கும் ஈடா? பிராப்தம் எப்படியிருக்கிறதோ?" என்றாள் அம்மா.

ரகுராமன் பெற்றோர்களுக்கு ஒரே பிள்ளை! மூன்று பெண்களுக்கிடையே ஒரே சகோதரர்! நல்ல வருமானமுள்ள டாக்டர்! பெரிய இடத்துப் பிள்ளை அவர்! அவருக்குச் சம்சாரியான தான் பெண் கொடுப்பதும், அவரை மாப்பிள்ளையாக அடைவதும் துர்பலம் என்பது அம்மாவின் எண்ணம்!

"நமக்கு கேட்கவே வாயேது!" என்றாள் உடனே. எனக்கு அந்த கடைசி வாக்கியம் தான் கோபத்தையும் ஏமாற்றத்தையும் அளித்தது!

'சம அந்தஸ்துடையவர்களிடையேதானோ சம்பந்தம் ஏற்படும்! நீங்கள் வாய் திறந்து ஒரு வார்த்தை கேட்டால், நடக்கக்கூடாதோ? வாயேது என்று நாம் சும்மா இருந்தால், அவர்களா வலுவிலே கேட்பார்கள்! பெண்ணைப் பெற்றவர்கள் இதற்கெல்லாம் பார்த்தால் பிள்ளையைப் பெற்றவர்கள் எப்படியிருக்கமாட்டார்கள்?'

இப்படியெல்லாம் எண்ணிக் குமுறிக்கொண்டிருந்தேன், மிதியுண்ட தண்ணீர்ப் பாம்புபோல!

அன்றையிலிருந்து அம்மா சொன்னது அடிக்கடி நினைவு வரும்: "ஆமாம்! நடக்கலாம்! ஆனால் நடக்குமா?"

சந்தேகம் எப்படி தன் ஆட்சி நிறைந்த கற்பனையுலகுக்கு எடுத்துப் போகுமோ, அதேபோல, சந்தேகமும் கவலையும் தம் ஆட்சி மிகுந்த ஒரு கற்பனையுலகுக்கே எடுத்தேகும்!

"இந்த நாளில் டாக்டர் படிப்புப் படிப்பவர்களுக்கும், டாக்டர்களுக்கும் கணக்கேது, வழக்கேது! வேறு யாராவது டாக்டர்தான் நம் வாழ்க்கையில் குதிப்பாரோ? இவரல்லவோ நம் கணவர்!"

இப்படி நினைத்துவிட்ட என் மனம் பதறும், ரகுராமனின் உருவத்திற்கு பதில் வேறு எவரையும் நினைக்க மனம் இடங்கொடாது, அவருடைய உருவத்துடன், அவருடைய பார்வையும் பளிச்சிடும் சந்திரன் தோன்றினால், கூடவே அதன் நிலவு தோன்றுவது போல.

'அவர் நம்மை விரும்புகிறார் போலத் தோன்றுகிறதே! அவரே நம்மை மணக்க முன் வரமாட்டாரா?' கொஞ்சம் தென்பு வரும். ஏனினும் நிர்மலமான இடத்திலே மாசு படந்தால், களங்கமற்ற மனதிலே சந்தேகம் புகுந்தால் அது படுத்தும் பாடு...... அப்பப்பா!....... நாளடைவிலே மனநிம்மதியே எனக்கு இருக்கவில்லை.

'இத்தனைக்கும் அவர் நம்மை விரும்புகிறாரோ இல்லையோ!" என்று தோன்றவும் நிலைமை வந்தது; அவருடைய பார்வை நினைவு வந்தாலும்கூட அந்த எண்ணம் முன்வந்து நின்றது. சந்திரன் தன் கலைகள் முழுவதையும் சேர்த்துக்கொண்டு உதித்திருந்தாலும், பூரண கிரஹணம் பிடித்துவிட்டால் நிலவு மறைகிறதே!

'ஆமாம்; இவரையும் இவர் பார்வையையும் நம்பிவிடலாமா? என்னைத்தான் இப்படிப் பார்க்கிறாரோ, அல்லது தான் பார்க்கும் ஒவ்வொரு பெண் மீதும் இப்படித்தான் பார்வையை வீசிவிட்டுப் போகிறாரோ, யார் கண்டது! இவருக்குத்தான் ஊரிலுள்ள முக்கால் வாசி வீடுகளிலும் வரவேற்புண்டே, கை ராசியென்று! தினமும் எத்தனை பெண்களைப் பாக்கிறாரோ! எத்தனை பெண்களின் கையைத் தொட்டுப் பார்த்து, அவர்கள் மனதிலும் ஆசையைப் புகுத்துகிறாரோ! எந்தப் பெண் இவரிடம் வைத்தியம் செய்துகொண்டு மனதிலும் ஆட்சி செலுத்துகிறாளோ? எட்டி நின்று பார்க்கும் நானே அவருடைய கவனத்தை இழுக்கும்பொழுது, இவரால் தொட்டுப் பார்க்கப்படும் எந்தப்பெண் இவர் மனதையே கவர்ந்துவிட்டாளோ? தொலைவிலிருந்து பார்க்கும் இவரே என்னைக் கவரும்பொழுது, அருகுவரும் எந்தப் பெண்தான் இவரிடம் மனதைப் பறிகொடுக்கமாட்டாள்! யார் கண்டது இவருடைய பார்வை எனக்கே உரியதென்று!'

இப்படியாக சந்தேகத்திலிருந்து பிறந்த மனச்சோர்வே, என்னை நோயை எதிர் கொண்டழைக்க ஏவியது.

"வேண்டும் பொருளையெல்லாம் மனது வெறுத்துவிட்டதடி!" என்று ஏங்கிய பெண்மணிபோல எனக்கும் எல்லாம் கசந்தது.

"ஐயோ, இவருடைய முழு கவனத்தையும் மனதையும் நாமே கவர்ந்து கொள்ள, ஏதாவது வியாதி வராதா? என் கை நாடியை அவர் பார்க்கச் சந்தர்ப்பம் கிடைத்தால், அவர் மனதை பற்றிக்கொள்ளலாமே!"

இதுவே என் தீராத ஆசையாகவே நான் கடவுளைக் குறை கூற முற்பட்டேன்.

'ஏன் திடமான உடம்பு தந்து மனதை வாட்டுகிறீர்!' என்று கோபித்தேன். ஆனால், கடவுள் செய்வதனைத்தையும் நன்மைக்கே என்று கூறும் ராஜா - மந்திரி கதையில் நடப்பதுபோல, என் விஷயத்திலும் நடந்தது. புராணங்கள் கோஷிக்கும் உண்மையை உணர்ந்தேன்.

ஒருநாள் ரகுராமனிடமிருந்து என் தந்தைக்கு ஒரு கடிதம் வந்தது! "உங்கள் பெண்ணை எனக்குக் கொடுக்க இசைவீர்களோ?" என்று கேட்டிருந்தார். என்ன விந்தை!

என் பெற்றோர்கள் நான் சம்மதிக்கணுமே என்றுதான் நினைத்தார்கள். என்னைக் கேட்டாள் அம்மா.

"அவரைப் பண்ணிக்கொள்ள வெறுப்பில்லையே?" என்று கேட்டதற்கு, "இல்லை!" என்றேன் மெல்ல. "விருப்பே அதிகம்!" என்று சொல்லவும் நா துடிதுடித்தது சந்தோஷ மிகுதியால். ஆனால் பெண் ஜன்மம் எடுத்த தோஷம், நா அவ்வாறு பேச துணியவில்லை. வெளியிட்டுக்கொள்ள முடியாத சந்தோஷத்தால், குமுட்டிமேல் கெட்டில் ஜலம்போல நான் திணறிக் கொண்டிருந்தேன்.

வெகு விரைவிலே எங்கள் 'திருமணம் நடந்தது! புதுமணம் புரிந்த நாங்கள் புதுமையின்பத்தில் திளைத்து வந்தாலும், ஒரு கேள்வியை மட்டும் கேட்கத் துடித்தேன் நான்.

'என்னிடம் எந்த உயர்வு கண்டு, என்னை மணக்கத் தானே முன் வந்தார்? வீட்டிலிருந்த மற்றோரையும் தன் விருப்பத்திற்கு இணங்கச் செய்த அந்த உறுதி, அவருக்கு எதனால் வந்தது? அம்மணி, சரசு, சுலோ இவர்களுக்கு அவர் வைத்தியம் செய்ததுண்டு என்பது நான் அறிந்த விஷயம். அவர்களும் அழகானவர்கள். அவர்களைவிட நான் அழகில் சிறந்தவளா,

அல்லது அவர்களுடைய பெற்றோர்தான் என் பெற்றோரைவிட குறைந்தவர்களா? இல்லை! அவர்களுக்கு வைத்தியம் செய்திருக்கிறாரே, அந்த பரிச்சயத்தால் அவர்கள்பால் இவர் மனம் தளர்ந்ததுண்டா? அவர்களில் யாரையேனும் மணக்கலாம் என்று இவர் நினைத்தவில்லையோ?'

தண்ணீரில் சுண்ணாம்பும் மஞ்சளும் கலந்து ஆலத்தி தயாரிப்பதுபோல, இரண்டு மூன்றுவிதமாக பேச்சைச் திருப்பி, எப்படியோ விஷயத்தைத் தெளிவாக்கினேன்.

"ஐயோ, சரு, உனக்கு என் அந்தரங்கம் தெரியாது!" என்றார் அவர்.

"தெரியப்படுத்துங்களேன்!" என்றேன் பதட்டத்துடன். "அவர்கள் விஷயத்திலே என் மனம் தளர்ந்ததுண்டு, நீ அறியாய்!" என்று சொல்லிவிடுவாரோ எனத் திகில் எனக்கு.

"தெரியப்படுத்தலாமா? அவர்கள் அழகாகவேயிருக்கலாம்! பணம் படைத்து பணத்துடன் வருபவர்களாகவேயிருக்கலாம்! ஆனால் என் மனம் அதைப்பற்றிச் சிந்தித்ததில்லை! அவர்களுடைய திடமற்ற உடல் நிலைமைதான் என் மனதில் பதிந்தது! ஒருத்தி பூதக்கண்ணாடி போன்ற மூக்குக்கண்ணாடிகளின் உதவியால் கண் பார்வை உடையவள்! இன்னொருத்தி சோனி! எத்தனை டானிக் சாப்பிட்டாலும் உடலில் சீவன், சுறுசுறுப்பு அற்றவள்! மற்றொருத்தி முறைக் காய்ச்சல்காரி! இன்னொருத்தி மாதம் இரண்டுமுறை காதுவலி, கண்வலி, ஏதாவது வந்து அவஸ்தைப்படுகிறவள்! இவர்கள்மேல் எல்லாம் என் மனம் சென்றதேயில்லை!" என்றார். உடனே என் பார்வையால் போலும் தூண்டப்பட்டு சொல்லலானார்.

"என் தொழிலே எனக்கு ஸ்வயம்வரமாக அமைந்தது. எப்போதும் வியாதிஸ்தர்களிடையே உழலும் எனக்கு, வீட்டிலே அமைதி அளிக்கவும் சந்தோஷம் மூட்டவும் நோயற்ற மனைவி வேண்டுமென்பது எண்ணம். என் எண்ணம் பகற்கனவாகும் என்று ஒரு சமயம் என் சிநேகிதன் சொன்னது உண்மையாகிவிடுமோ என்று பயந்தேன். ஆனால் இரண்டரை வருஷம் உங்கள் வீட்டில் உன்னைத் தவிர மற்றெல்லோருக்கும் வைத்தியம் செய்தேனே ஒழிய, உனக்கு ஒரு டோஸ் மருந்து கொடுக்கவில்லை. உன் தம்பிக்கு டைபாய்டு வந்தது, நீ தாக்கப்படவில்லை. நீதான் ஆரோக்கியமான உடம்பு படைத்தவள் என்று கண்டு, அப்போதே உன் தந்தையைக் கேட்க வேண்டுமென எண்ணினேன். எதற்கும் நாலுமாதம் பொறுத்துப் பார்ப்போம் உன் உடல் உரத்தை என்று நினைத்துக்கொண்டேன். அப்புறம் கல்யாண மாதங்கள் நெருங்கவே, என் மன வலிமைகுன்றிவிட்டது! கடிதம் எழுதிக் கேட்டுவிட்டேன் உன் அப்பாவை" என்றார் அவர், சிரித்துக்கொண்டே.

'ஆஹா எத்தகைய உத்தம புருஷர், சிறந்த லட்சியங்கொண்டவர்!" என்று கணவர் மீது மதிப்பும், 'ஆ! கடவுளின் செயலைப் பழித்தேனே! நான் விரும்பியபடி காய்ச்சலோ குளிரோ வந்திருந்தால், இவர் நம்மையும் உதறித் தள்ளியிருப்பார்! ஏறெடுத்துப் பார்த்தும் இராரே! இத்தகைய சிறந்த கணவனைக் கடவுள் அளித்தாரே!,' என்று கடவுளின் மீது பக்தி கொண்டேன்.

ஸ்ரீமதி ரகுராமனான பின், இரண்டு வருடங்கள் இன்பமயமான வாழ்க்கை நடத்தினேன்.

அவருக்கு பெங்களூரில் பெரியதொரு ஆஸ்பத்திரியில் வேலைக்கு அழைப்பு வரவே, சொந்த ஊரில் இருந்த குடித்தனத்தை பெங்களூருக்கு மாற்றினோம். அவருடைய பெற்றோர்களும், கடைசிப் பெண்கள் இருவரும் மட்டும் சொந்த ஊரிலேயே இருக்க நேர்ந்தது.

அங்கே சென்ற சில மாதங்களுக்கெல்லாம், ஏதோ ஒரு குறை, தனிமையின் குறைதான், என்னைப் பிடுங்கித் தின்று வரலாயிற்று. அவருக்கு வேலை நெட்டி வாங்கும் ஆஸ்பத்திரியில். என்னுடன் பேசவோ, சாப்பிடவோ, தூங்கவோ அவருக்கு நிம்மதி கிடையாது. 'இந்தக் கேஸ்', 'அந்தக் கேஸ்' என்று பறந்த வண்ணம் இருப்பார்.

அது எனக்குக் கொஞ்சமும் பிடிக்கவில்லை. ஆனால் "கடமையிலிருந்து பிறழுங்கள்!" என்று சொல்ல முடியுமா? சொல்லத்தான் சொல்லலாமா?

கடைசியில் அந்தக்குறை வேறு விதமாகப் பரிணமித்தது. "ஊராருக்கெல்லாம் சிகிச்சை செய்துகொண்டிருக்கட்டும்! நம்முடன் ஒரு வார்த்தையும் பேசவேண்டாம்!" என்று பொருமலானேன்.

'நமக்கு காய்ச்சல் குளிர் ஏதாவது வந்தலாவது, நம்மையும் ஒரு ஐந்து நிமிஷம் விசாரித்துவிட்டுப் போவார்! நமக்குத்தான் ஒரு கேடும் வராதே! சொந்த விஷயமாக, சொந்தப் பெண்டாட்டிக்காக ஒரு டோஸ் மருந்தோ. ஒரு பத்து நிமிஷப் பொழுதோ, செலவு செய்ய வேண்டாம் என்றுதானே என்னைக் கல்யாணம் செய்துகொண்டார்! அப்படியே இருக்கட்டும்! என்னால் ஒரு இம்சையுமில்லாமல், ஆஸ்பத்திரியிலேயே நர்சுகளுடன் சுற்றிச் சுற்றி வரட்டும்! இங்கே எனக்கென்ன கேடு, எது வேணும், என்ன செய்யணும் என்று விசாரிக்க!' என்று உள்ளம் வெதும்பலானேன், முட்டைச் சாம்பலுக்கிடையே வேகும் கிழங்கைப்போல.

எப்படியோ இந்தப் புரைசல் எல்லாம், நாளடைவிலே சந்தேகத்தையே எழுப்பி விட்டுவிட்டது. என்ன இருந்தாலும் டாக்டர்களை நம்பலாமா? நர்சுகள், லேடி டாக்டர்கள் இவர்களின் வலையில் விழாமல் தப்புவார்களா? ஏனோ என் மனம், 'நம்பாதே!' என்று சொல்வது போலவே தோன்றியது. தனிமையில் வாடிய என் மனம், நோயாளிகளும், நர்சுகளும் சூழ என் கணவர் ஆஸ்பத்திரியிலேயிருப்பதை பார்த்து, வெகுண்டு வெகுண்டு, வெடித்துவிட்டால் தேவலை போல இருக்கும்! அவருக்கு என் நினைவேயிராது, நாம்தான் புழுங்கி மாய்கிறோமே, அவருக்காக! என்ற எண்ணத்தை என்னால் தாங்கவே முடியாது போய்விடும்.

ஒரு நாள் என்னையுமறியாமல் கண்ணீர் வடித்துக்கொண்டிருந்தேன். மறுபடியும் இருவரும் அளவளாவிப் பேசி பொழுது போக்குவோமா என்ற என் ஏக்கம் கண்ணீர் ஊற்றுக்குக் காரணமாயிற்று. வீட்டுக்குள்ளும் வெளியிலும் மின்சார தீபஒளி ஜகஜ்ஜோதியாகயிருப்பினும், எனக்குக் காட்டில் கண்ணைக்கட்டி விட்டுவிட்டது போன்ற ஏக்கம். ஏதோ தாறுமாறான நினைப்புகளிலும், எண்ணங்களிலும் ஆழ்ந்தேன்.

"சரு!" என்ற பலத்த குரல் கேட்டுத்திரும்பிப் பார்த்தேன்.

"ஏன், அழுது கொண்டிருந்தாயா?.... அதிசயமாயிருக்கே!" என்றார் என் கணவர்!

"ஏன் அதிசயமாயிருக்காது? உங்கள் கண்களால் என்னைத் தினமும் கவனித்திருந்தால்தானே, நான் தினமும் அழுது அழுது, அழுகிக்கொண்டிருப்பதைப் பார்க்க முடியும்!... நீங்கள் இந்த வேளையில் அதிசயமாக வீட்டுக்கு வந்து, என்னுடன் வலுவிலே பேச்சுக் கொடுத்ததே அதிசயமாயிருக்கும்போது ... என் அழுகையும் நானும், இந்த வீடுமே அதிசயமாகத்தான் இருக்கும் உங்களுக்கு!" என்று ஆவேசம் வந்தவள் போல கதறிவிட்டு, மீண்டும் அழலானேன்.

"அடடா! தினமுமா அழுகிறாய்? ஏன், என்ன குறை உனக்கு?" என்று கூறியவண்ணம் பக்கத்தில் வந்து அமர்ந்தார் அவர்.

சிறிது அடங்கிய என் உள்ளம், சாதாரணத் தொனியிலே பேச இடமளித்தது.

"நானும் நர்சாக உங்கள் ஆஸ்பத்திரியில் இருக்கிறேன்! எனக்கு 'டிரெயினிங்' தர ஏற்பாடு செய்யுங்களேன்!" என்றேன்.

"இதென்ன விபரீத ஆசை, சரு?" என்று அவர் கேட்கவே, நான், "விபரீத ஆசையென்ன! நர்ஸ் வேலை எவ்வளவு சிலாக்கியமானது! நீங்கள் உங்கள் ஆஸ்பத்திரி நர்சுகளையும் தேவமணியையும் ஆயிரந் தடவை புகழ்ந்து வந்ததிலிருந்தே, அந்த வேலை எவ்வளவு உசத்தியென்று தெரிந்துகொண்டேனே நான்!" என்று பதிலளித்தேன், நிஷ்டூரமாக.

"சரு, நீ சொல்வதன் அர்த்தம் என்ன!"

"நானும் நர்சாக வந்து உங்கள் புகழ்ச்சிக்கும் கவனத்துக்கும் பாத்திரமாக விரும்புகிறேன் என்பது தான்! நான்தான் ஒரு கொட்டாப்புளி, கல்லுகுண்டு! இரும்பால் செய்து மெழுகால் அப்பியிருக்கிறார் கடவுள்! உங்களுக்கு என்னால் இம்சையிருக்கக் கூடாதென்றால், உபகாரமும் இருக்கக்கூடாதா என்ன! ஏதோ இவளால் உபயோகமுண்டு என்று

தெரிந்துகொண்டால் அப்போதாவது லக்ஷ்யம் செய்யமாட்டீர்களா என்னை என்று பார்க்கிறேன்!" என்று நானும் பதில் விடுத்தேன், சிறிதும் தளராமல்.

'இதென்ன, சரமாரியாக இப்படிப் பேசி காரசாரமாய்ப் போடுபோட இவளுக்குள் எண்ணங்களும் வார்த்தைகளும் எங்கே எப்படி அடங்கியிருந்தன!' என்று அவர் வியந்திருக்கவேண்டும். பேசாமல் இருந்தார் சிறிது நேரம்.

பிறகு, "சரு! எனக்குத் தெரிந்து போச்சு உன் வருத்தம்! நீ தனிமையில் வருந்தாமலிருக்க, உன்னையும் ஒரு நர்சாக்கப் போகிறேன்!" என்றார். கையைப் பற்றிக் கொள்ளப் போனார்.

"ஆகா, என்ன அழகாய் என் மனதை அறிந்துகொண்டீர்கள்!" என்று ஆத்திரம் பொங்கியதெனக்கு.

'ஆகா, உண்மையில் உங்களுக்கு நர்சு, நர்சு உடை, நர்சு பதவி இவற்றில் மோகம்தானா?' என்று சினம் பிறந்தது.

"உங்கள் தேவமணியல்ல நான்!" என்று கூறிவிட்டு, கையை வெடுக்கென பிடுங்கிக் கொண்டேன்.

"சரு!" என்று உரக்கக் கூறியவாறு இடத்தை விட்டு எழுந்தவர், "இதோ பார்! உன் மனதைச் சமாதானப்படுத்தி சந்தேகம் போக்கலாம் என்று நினைத்தால், நீ என் வார்த்தையை ஏற்க மாட்டேனென்கிறாய்! மனப்புண்ணை ஆற்ற முன்வந்தால், விரட்டியடிக்கிறாய்! நான் போகட்டுமா? ஆபத்தான வாலிபப் பருவத்தில் வெற்றியோடு வெளியேறிய நான், இந்த சம்சார வாழ்க்கையில் ஈடுபட்டபின், அதுவும் உன்னை மனைவியாக பெற்ற பிறகு, கட்டு மீறித் திரிவேன் என்று நினைக்கிறாயே! அது சுத்தக் கோழைத்தனம்! நான் சொல்லவேண்டியதை சொல்லிவிட்டேன், போகிறேன்!" என்றார்.

'ஆகா, பட்டணத்தில் அவர் பார்க்காத பெண்களா? மெடிகல் காலேஜில் அவர் பேசிப் பழகாத பெண்கள் இருக்க முடியுமா? அப்போதெல்லாம் மனம் போனபடி போகாமலோ, நெறிசெறிந்த வழியிலே செல்லும் மனதைக் கெடுத்துக்கொள்ளாமலோ தப்பிவிட்டு, அப்புறமும் நம் ஊரிலே ஆர அமரயோசித்து, பின்பே, நம்மை மனைவியாக ஏற்றவராயிற்றே! இப்படிப்பட்டவர் மீதா இல்லாத குற்றங் கற்பித்துக்கொண்டு நேருக்கு நேர் தூற்றினோம்!' என்று சிந்தித்துக்கொண்டிருந்த நான், இதுவரை அசரீரி வாக்குக் கேட்டு கட்டுப்பட்டு நிற்கும் பக்தனைப் போல பரவச நிலையிலிருந்தேன்.

"நான் போகிறேன்!" என்ற அவருடைய இறுதி மொழிகள் விழிப்பூட்டின எனக்கு. "ஐயோ போகவேண்டாமே!" என்றேன்.

"அப்படியானால் கிட்ட வரலாமோல்லியோ?"

இதென்ன கேள்வி! நான் ஏன் பதில் சொல்கிறேன்?

"என்னை நர்சாக ஆக்கிவிட்டால் என் மனப்புண் ஆறிவிடும் என்று நினைத்துவிட்டீர்களே! என்ன அழகாக என் மனதை அறிந்து கொண்டீர்கள்? அதுதான் எனக்கு பொறுக்கவில்லை!" என்றேன் கொஞ்சம் நேரம் கழித்து.

"சரு, உன் மனப்புண்ணை ஆற்றும்விதத்தை அறியாதவனா நான்! 'நர்சாக்குகிறேன்' என்று சொன்னபொழுது, என்ன அர்த்தங்கொண்டு சொன்னேன் என்பதை நீயே அறிந்துகொள்ளாவிட்டாலும், நான் சொல்வதற்குள் கோபித்துக்கொண்டுவிட்டாய்!"

"என் குழந்தைகளுக்கு உன்னை நர்சாக்கப் போகிறேன் நான்! தாயை விட சிறந்த நர்சு யார்? . . . பார்த்தாயா? இப்போதே சிரிப்பும், சந்தோஷமும் வந்துவிட்டதே உன் முகத்தில்! அப்புறம் நான் சொல்வதுபோல உண்மையாகவே ஆகிவிட்டாயானால், என்னைக்கூட குழந்தைகளுக்கு அடுத்தபடியாகத்தான் கவனிப்பாய்! உம், அப்படித்தானே!" என்று பதிலளித்தார் அவர் செல்லமாக.

'அப்பா, எப்பேர்ப்பட்ட கஷ்டங்களிலும், எத்தனை சிக்கல்களிலும், இவரும், இவருடைய அன்பும் நமக்கே உரிமை! இது உண்மை! உலகமே பொய்யானாலும், இதுபொய்யல்ல!' என்ற

உறுதி, அமிர்த சஞ்சீவி போல என் இதயத்தில் பாய்ந்து, அங்கு தோன்றியிருந்த ரணத்தை ஆற்றி எனக்கு சுவர்க்க சுகம் ஈந்தது அப்போது.

இன்றும் எனக்கு அந்த நம்பிக்கை உண்டு. அது உரம்பெற்றும் வருகிறது நாளுக்கு நாள். ஆனால் ஒரு விஷயத்தை சொல்லத்தான் வேண்டும், அதுதான் முறை.

இயற்கையாகப் பெண் மனதிலே கணவன்பால் ஏற்படும் மிகைப்பட்ட அன்பினாலும் பாசத்தினாலும், அந்தக் காதல் அன்பின் மற்றொரு அம்சமான பொறாமையும், அதன் விளைவாக சந்தேக எண்ணமும் அவ்வப்போது தோன்றுவதுண்டு. அப்படியிருக்க, ஒரு டாக்டரின் மனைவியான நான் அந்த விதிக்கு இலக்காகாமல், விலக்காக முடியுமா? நான் இப்பொழுது இரண்டு குழந்தைகளுக்குத் தாயாகிவிட்டபோதிலும், அவ்வப்போது சந்தேக எண்ணமும், அதனால் குறைகளும் தோன்றத்தான் தோன்றுகின்றன! அதைத் தவிர்க்க முடிவதில்லை!

என் இதய ரணங்களை ஆற்றி என்னைத் தேற்ற ஆர்வமும் உண்மையான அக்கரையும் உடையவர் என் கணவர் என்பதை நான் அவருடைய முயற்சிகளிலும் செயல்களிலும் உணரும்போதெல்லாம், அந்த சிரமமும் அவருக்கு வைக்கக்கூடாது என்றுதான் நினைத்துக் கொள்கிறேன்; அது ஆச்சரியமா?

மனைவியின் மனப்புண்ணை ஆற்றும் வகை தெரிந்த அவர், மற்றவர்களின் உடற் கோளாறுகளை திறம்பட குணமாக்குவதும் ஒரு அதிசயமா?

வீட்டிலே அமைதி தர நோயற்ற மனைவி வேண்டும் என்று விரும்பிய அவருக்கு, நான் அடிக்கடி மனம் நொந்து, தமக்கு அதை ஆற்றும் பணியைக் கெடுத்து வருவதையும் அவர் பொருட்செய்யாமல், எனக்கு மனக்கிலேசம் ஏற்படும்பொழுதெல்லாம், அன்போடு அக்கறையோடு சிகித்சை செய்துவருகிறாரே, அந்த மனச்சிகித்சையைவிட, மற்றவர்களுக்கு அவர் அளித்து வரும் உடல் சிகித்சை உயர்ந்ததல்ல தான்.

திருமணத்திற்கு முன்பிருந்தே, அவர் மீது அன்பு மிகுந்தவளாய் அவர் மீது சந்தேகக் கண் செலுத்தும் பழக்க மேற்பட்டுவிட்ட எனக்கு, கடவுளருளால், அந்த பழக்கம் அகன்றால் அது விசித்திரம்தான்.

ஆனால் நான் கண்கூடாக இதுவரை கண்டு உணர்ந்த உண்மை இதுதான். அன்பிருக்கையிலே - குறைகள் தோன்றுவதும், அவை உடனுக்குடனேயே அன்பினாலேயே அகற்றப்படுவதுமே விந்தையிலும் விந்தை! அன்பே எதையும் அடக்கவல்லது, சிறப்பிக்க வல்லது என்பதை என் அனுபவமும் உணர்த்துகிறது; உலகப்போக்கும் அறிவுறுத்துகிறது. அன்பின் சக்தியிலேதான் பெருமை காண்கிறேன்.

..........

(புதுமைப்பெண், மார்ச், 1948)